RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# குறிஞ்சித்தேன் நாவல் காட்டும் கதை மாந்தர்கள்

**க. கமலா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம்-117, தமிழ்நாடு, இந்தியா

# Characters Portrayed in the Novel 'Kurinji Then'

**K. Kamala** [a, *]

[a] Department of Tamil, Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Pallavaram-117, Tamil Nadu, India

*Corresponding Author: kkamaladr@gmail.com

Received: 03-12-2025
Revised: 18-02-2026
Accepted: 10-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Our Tamil language is a proud classical language that has gained maturity and richness in ideas over time and is a sweet language to express. Prose has the power to clearly describe social relations and the human movements that arise from them, and how these come together to form a psychological force that transforms society itself into a social psychology. In this way, many literary forms such as poetry, short stories, novels, and drama emerged in the twentieth century. A short story can be an explanation of a piece of news. However, a novel has the power to present an entire society to the reader. Novels have an important place in the literary genres of the twentieth century. It is no exaggeration to say that novels have received the best reception in the literary world because they stand at the forefront of explaining people's lives, cultural traditions, and social problems. Characterization is essential in various elements of a novel. A novel is a portrait of the lives of diverse people. Its speciality lies in the characters created in it.

**Keywords:** Social Life, The Way of Life, Cultural Traditions, Social Problems

## முன்னுரை

ஒரு நல்ல நாவல்களின் அடிப்படையே பாத்திரப் படைப்புதான். வேறொன்று அல்ல எனலாம். எல்லா நாவல்களும் பாத்திரங்களுடன் தொடர்பு கொண்டவை மட்டுமில்லாது அவற்றை உணர்த்துவதே பாத்திரப் படைப்புகளின் ஓட்டமாகக் கருதப்படுகின்றது. அதன் அடிப்படையில் இராஜம் கிருஷ்ணன் எழுதிய "குறிஞ்சித்தேன்" என்ற நாவலில் இடம்பெறும் முதன்மைப் பாத்திரங்களைக் குறித்த செய்திகள் இக்கட்டுரையின் ஆய்வாக அமைகிறது.

## பாத்திரப் படைப்புப் பற்றிய அறிஞர்களின்க ருத்துக்கள்

"பாத்திரப் படைப்பின் சிறப்பினைக் கதைப் பின்னலை விட இன்றியமையாத ஒன்று நாவலில் உண்டு. அதுதான் கதைப் பின்னலுக்குச் சிறப்பையும் உயிரோட்டத்தையும் கொடுக்கின்றது. அந்த ஒன்றுதான் பாத்திரப்படைப்பு" என்று இரா. மோகன் (1972. ப - 42) கூறுகின்றார்.

ஒரு நாவலின் முழுமைக்குத் தேர்ந்த பாத்திரப் படைப்பும் பாத்திர வளர்ச்சி நிலைச் சித்தரிப்பும் இன்றியமையாதது ஆகும். பாத்திர வளர்ச்சியில் நிகழ்ச்சி சுழல வேண்டும். சிறந்த நாவல் ஆசிரியர் படைத்த படைப்பில் ஆராய்வோமானால் அவற்றின் பாத்திரங்கள் நம் கற்பனையில் உயிர் உள்ளவை போலத்தோன்றும். இவ்வாறு படைக்கப்படும் புதினம் சிறப்பானதாக மதிக்கப்படும். மேலும்,

"நான் என் பாத்திரங்களைக் கட்டுப்படுத்துவதில்லை. நான் அவர்களுக்குக் கட்டுப்பட்டு விடுகிறேன். அவர்கள் விரும்பிய வண்ணம் என்னை அழைத்துச் செல்கின்றேன்"

(தா.ஏ.ஞானமூர்த்தி.1980.ப–302) என்பது தாக்கரேவின் கருத்தாகும். கதைத் திட்டத்தை எலும்புக் கூடு என்றால் அக்கூட்டுக்கு உயிரையும் பொருளையும் பொலிவையும் தருவது பாத்திரமே ஆகும்.

“கதை மாந்தர்கள் பெரும்பாலும் நடமாடும் மாந்தர்களின் படப்பிடிப்பாகவும் அவற்றின் குண இயல்புகளைத் தேர்ந்தெடுக்கும் சிறப்பியல்புகளைக் கொண்டவர்களாகவும் அமைய வேண்டும்” (ந. பிச்சமுத்து .1986 . ப 214) என்பதாக ராபட்லிடல் கருத்தும் அமைகின்றது. ஒரு கவிஞன் படைக்கும் விலங்கு கதைகள், பேய் பிசாசுகளின் கதைகள், அறிவியல் புனைவு கதைகளிலும் கூட அடிப்படை நாவல் பொருளாக இருப்பவன் மனிதன். வேறு எந்தக் கூறுகளையும் விட நாவல்களின் பாத்திரப் படைப்பே நம் கவனத்திற்கு உரியதாகின்றது.

“இலக்கிய வகைகளில் நாவல் மிகச் சிறந்த இடத்தைப் பெற்று இருப்பதற்குக் காரணம் கதைத் திட்டத்தால் அன்று. பாத்திரப் படைப்பால் தான் இயங்க வைக்கின்றது. பாத்திரப் படைப்பு என்று பெயர் சூட்டிவிடுவதாலோ அல்ல. மனம், அறிவு, சிந்தனை, குண இயல்பு, சூழ்நிலைகளின் போது வெளிப்படும் உணர்வுகள் இவற்றை எல்லாம் கூர்ந்து அறிந்து அனுபவமாக வெளியிடுவதே” (மா. இராமலிங்கம், 1975 -ப -55) என்பது ஜெயகாந்தனின் வெளிப்பாடாக உள்ளது.

நாவலில் இடம்பெறும் மாந்தர்கள் சாமானியர்கள் பிறப்பு, இறப்பு, உணவு, உடை, உறையுள், பாலுணர்ச்சி என்பன மக்களாகப் பிறந்த அனைவருக்கும் இன்றியமையாதவை ஆகும். இந்த ஆறு கூறுகளையும் இயல்பாகப் பெற்ற அனைவரும் நாவலில் இடம் பெறவேண்டும். தான் வாழும் சமூகத்துடன் ஏதோ ஒருவகையில் முரண்படுகிறவன் எவனோ அவனே நாவலின் கதாநாயகனாக இருத்தல் வேண்டும். எனினும்

“சமூக வாழ்வில் ஏதோ ஒரு முனைவுடன் முரண்படுகிற போதுதான் அவனுக்குத் தனித்துவம் ஏற்படுகின்றது. அந்தத் தனித்துவமே கதாநாயகனை உருவாக்கும் அடிப்படை ” (மா.இராமலிங்கம்,1975.ப–215) என்ற மா. இராமலிங்கத்தின் கருத்தும் நோக்கத்தக்கது.

## பாத்திரப் படைப்பில்கையாளப்படும் உத்திமுறைகள்

1. புறத்தோற்றம்
2. அசைவுகள்
3. சாடைகள்
4. நடத்தைமுறைகள்
5. பழக்கம்
6. மற்றவர்களோடுநடந்துகொள்ளும்முறை
7. சுற்றுப்புறச்சூழ்நிலைகள்
8. பாத்திரங்களின்கடந்தகாலவாழ்வு
9. பாத்திரங்களின் பெயரமைதி

இவையாவும் மரபு வழியான உத்தி முறைகளாகும். மேற்கண்ட உத்தி முறைகளோடு முதன்மைப் பாத்திரம் என்பது கதை முழுவதும் தொடர்புடைய பாத்திரங்கள் ஆகும். இப்பாத்திரங்களின் செயல்பாடுகளால் கதை முழுமையுறுகின்றது. கதையின் இறுதி எல்லை வரை இப்பாத்திரங்களின் செயல் குறிப்பிடப் பெறுகின்றது. முதன்மைப் பாத்திரங்களைக் கீழ்க்காணும் வகையில் பாகுபடுத்தப்படுத்தி இவண் ஆராயப்பட்டுள்ளது. அவை,

1. ஆண்முதன்மைப்பாத்திரங்கள்
2. பெண்முதன்மைப்பாத்திரங்கள்

என்பனவாகும்.

## ஜோகி

லிங்கையாவின் மகன் ஜோகி. இரிய மக்களின் கடவுளான ஈசனின் கோயிலில் பணிசெய்து வந்தான். தந்தை கூறியவுடன் கோயில் பணியை அன்புடன் ஏற்றுக்கொண்டான். ஜோகி பருவைக் காதலித்தான். ஆனால், பருவின் மனதில் தனக்கு இடமில்லை என்று அறிந்த மறுநிமிடமே தனது மனதை மாற்றிக் கொண்ட பண்பாளனாக அவன் திகழ்கிறான். அதன் பின் பருவின் தங்கையான கிரிசையை மணந்து கொண்டான். பருவின் மனது நினைத்த கிருஷ்ணனை அவன் அடைய அவளுக்குக்

குறும்பர்களிடம் சென்று வேர் வாங்கித் தருவதன் மூலம் அவனின் தியாக மனப்பான்மையை அறியலாம். தன் ஊரை விட்டுப்போகும் போது தன் குழந்தையைப் பாருவிடம் கேட்கும் போது அவள் கொடுக்க மறுக்கின்றாள். அதன் பின் மூவரும் தன் மாமன் ஊருக்குச் சென்று தங்கினர். மண்ணையே மூச்சாகக் கொண்ட ஜோகி நல்ல பண்பாளனாகக் காட்சியளிக்கின்றான்.

## கிருஷ்ணன்

பெரிய மல்லரின் பேரன். பொறியியல் பட்டத்திற்குப் படித்துக் கொண்டிருந்தான். பருவைக் காதலித்த இவன் புதினத்தின் மூலகாரணமாகத் திகழ்கின்றான். தங்கள் நிலத்தை ஊரில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கும் பிளேக் நோய் வந்த போது மருத்துவரை அழைத்து வந்து உதவி செய்ததும் இவனது முயற்சியின் சிறப்பம்சமாகும். கல் தூக்கும் போட்டியில் தோற்றுப் பருவைத் திருமணம் செய்யாமல் ருக்மணியைத் திருமணம் செய்கின்றான். இரு குடும்பப் பகையை மாற்றி ஒன்று சேர்க்க வேண்டும் என்று முயல்கிறான். பணம் இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் சேவை செய்ததால் அவனை எல்லோரும் நல்ல குணமும் பண்பும் உள்ளவன் என்று புகழ்கின்றனர்.

## ரங்கன்

மதனின் மகன் ரங்கன். தன் நண்பர்களோடு விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில் ரங்கன் பாரு தவற விட்டகாப் பை எடுத்துக் கொண்டு ஒத்தைக்கு ஓட முயல்கின்றான். பிறகு சென்று ஸ்நோ டௌன் பால்பண்ணையில் வேலையில் சேர்ந்தான். பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து ஹட்டிக்குத் திரும்புகின்றான். தான் உழைக்காத காரணமும் தன்னுடைய தாய் இறந்ததும் பருவைத் திருமணம் செய்யவேண்டும் என்ற நோக்கமும் இவனுடைய முரட்டுத்தனத்திற்குக் காரணம். இதனால் கல்தூக்கும் போட்டியில் வென்று பருவைத் திருமணம் செய்தான். திருமணத்திற்குப் பின்பு பாருவுக்கும் ரங்கனுக்கும் மண வாழ்க்கையில் வேறுபாடு காணப்படுகின்றது. ரங்கன் கௌரி என்ற பெண்ணுடன் திருமணத்திற்கு முன்னரே கள்ளத்தொடர்பு வைத்திருந்தான். அக்கள்ளத் தொடர்பை அறிந்த பாரு, கௌரியைத் திருமணம் செய்துகொள் என்று கூறும் போது ரங்கன் மிகவும் வருந்தி உன் மனதை மிகவும் துன்புறுத்திவிட்டேன். இவளால் என் வாழ்வு கெட்டுவிட்டது என்கிறாயா? என்று கூறுகின்றான். என்னுடைய பொறாமைக் குணமும் முரட்டுத் தனமும்தான் நாம் இத்தகைய நிலைக்கு ஆளானதற்கான காரணமென்று பாருவிடம் கூறுகின்றான். பாரு ரங்கனிடம் இருந்து பிரியும் போது கூடரங்கன் அந்த முரட்டுத் தனத்தை மாற்றவில்லை. அதனால் ஊர் மக்கள் வெறுக்கத்தக்க ஆளாக மாறுகின்றான். கடைசியில் பாலம் கட்டும் தொழிற் சாலையில் நடந்த போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிக்கு இரையாகி மாண்டு போகிறான். தீயக்குணம் கொண்ட பாத்திரமாகப் புதினத்தில் ரங்கன் இடம் பெறுகின்றான்.

## பாரு

ஜோகியின் மாமன் மகள். இவள் கிருஷ்ணனைக் காதலித்தாள். கல்தூக்கும் போட்டியில் வென்ற ரங்கனுக்கு இவளைத் திருமணம் செய்து வைக்கின்றனர். இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயானாள். ரங்கனின் வெறிப்போக்கை அறிந்த அவள் அவனிடமிருந்து விலகி வசித்துவந்தாள். அதன் பின் இரண்டு குழந்தைகளும் பிளேக் நோயால் பலியானார்கள். அவள் விரும்பிய அனைத்தும் அவளுக்குக் கிடைக்காமல் போனது. அதன் பின்னர் மண்ணில் உழைக்கும் உழைப்பையே வாழ்க்கைப் பிடிப்பாகக் கொண்ட அவளுக்கு ஜோகியின் மகன் நஞ்சன் வளர்ப்புக் குழந்தையாகக் கிடைத்த நாள் முதல் அவளுடைய வாழ்வில் புது மலர்ச்சியைக் கண்டாள். தியாகத்தின் திருவுருவாக வாழத் தொடங்கிய அவள் மழையில்லாக் கொடுமையாலும் வறுமையினாலும் வாடுகின்றாள். அந்நிலையிலும் தன் மகனை நன்கு படிக்க வைக்க வேண்டுமென்று கருதுகின்றாள். அவள் எண்ணம் நிறைவேறிய நிலையில் தன் அன்பு மகனின் காதலை எண்ணிக் கவலையுறுகின்றாள். கிருஷ்ணனின் கருப்பு மண்ணை வாங்கி அதில் வேலை செய்து கொண்டிருக்கும் போதுதான் அவள் சுவாசம் நிறைவுடன் அடங்கியது. பாரு நல்ல குணமும் பண்பும் கொண்ட பாத்திரமாக அமைகின்றாள்.

## கௌரி

ரங்கனின் திருமணத்திற்கு முன்பே திருமணமாகி விவாகரத்து ஆனவள் என்பதை மறந்து ரங்கனை விரும்புகின்றாள். பாருவைத் திருமணம் செய்த பின்பு அவளோடு ஒட்டி வாழாமல் கௌரியுடன் வாழ்க்கையைத் தொடங்குகின்றான். பாரு அங்கு வந்தாலும் கௌரி அவளை அன்போடு உபசரித்தாள். இரண்டு குழந்தைகளுக்குத் தாயானாள். ஆடம்பரமாக வாழவேண்டும் என்று எண்ணுகிறவள். இன்றைய பெண்கள் எப்படி சீரழிகின்றனர் என்பதை இப்பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறாக ஆண் – பெண் கதை மாந்தர்களின் வழி அவர்களின் பண்பு

நலன்களையும் வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் இன்பத் துன்பங்கள், பிறப்பு – இறப்பு, ஏழ்மைநிலை, வறுமை துயரம் போன்றவை ஆசிரியர் தெளிவுற எடுத்துக்காட்டுகிறார்.

## முடிவுரை

இலக்கியங்கள் காலத்தின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் ஏற்ப புதுமைகளைப் புகுத்துவதில் தலைசிறந்து விளங்குகின்றன. அவ்வகையில் புதினமும் ஓர் அவசியமான இலக்கிய வகையாக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது உருவான நோக்கம் நிறைவேறியுள்ளதை அறியமுடிகிறது. மண்ணில் மக்களிடம் பலவகைகளில் பல இடங்களில் வாழ்ந்து வருகின்றனர் எனினும் அடிப்படை வசதிகளைக் கூட நிறைவேற்ற முடியாத மற்றும் கிடைக்காத மக்களாக மலைவாழ் மக்கள் வாழும் சூழல், சமுதாய அமைப்பு ஆகியன பாத்திரப்படைப் பின்வழி அறிய முடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் முதன்மைப் பாத்திரங்கள் அனைத்தும் அவற்றின் தன்மைகளுக்கேற்ப விளக்கமாகப் படைக்கப்பட்டிருப்பதுடன் வாழ்வின் எதார்த்தத்தையும் பாத்திரங்களுக்கேற்ற பெயர்ப் பொருத்தமும் கதாப்பாத்திரங்களில் மிளிர்வதைக் காணமுடிகின்றது.

## References


I. Mohan, (1972), M. Vanavalgal, Sarvodaya Ilakkiyappannai, Madurai.

M. Ramalingam, (1975) Novel Literature, Tamil Putthakalayam, Chennai.

N. Pichamuthu, (1986), Criticism and Principles of Tamil Literature, Pari Putthakam, Chennai

Rajamkrishnan, (2001), Kurinjithen, Thagampathikam, Chennai.

Tha. A. Gnanamoorthy, (1980), Literary Criticism, Ainthinaipadhipannai, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License